தன்மையை எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருக்கிறது. அவர் எழுதிய "நோய்களை குணப்படுத்தும் இந்துக் கோவில் மரங்கள்" நூலை நான் படித்தேன். சுமார் 900 பக்கங்கள் கொண்ட இந்த அரிய நூலை இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதி இருக்கின்றார் என்பது தான் முக்கியச் செய்தி. இது நூல் மட்டுமல்ல. 121 தல விருட்சங்களின் ஆய்வுக் கட்டுரைகளாக எழுதி உள்ளார். பி.எச்.டி. டாக்டர் பட்டத்துக்கு சமமாக எழுதப்பட்டிருக்கின்றது.

பல கோவில்களுக்கு அவரே நேரில் சென்று, தங்கி இருந்து, ஆய்ந்தறிந்து எழுதி இருக்கின்றார். இந்து சமுதாய மக்களுக்கே முழுமையாக தெரியாத விஷயங்களையெல்லாம் அவர் எழுதி இருக்கின்றார். இந்த கோவில் மரங்கள் 2000 ஆண்டுகள் பழமையானது என்பதை ஊர்ஜிதம் செய்ய சங்க இலக்கியங்களில் மரங்களைப்பற்றியும், கோவில்களைப் பற்றியும் கிடைத்த தகவல்களை இணைத்துள்ளார்.

கோவில் மரங்கள் மருத்துவ குணங்கள் கொண்டவை என்பதை நிரூபிக்க பல நூல்களில் இருந்து திரட்டப்பட்ட மருத்துவக் குறிப்புகளை தெளிவாக எழுதி இருக்கின்றார். இந்த நூலை மணிமேகலைப் பிரசுரம் வெளியிடுவதில் பெருமை படுகிறது.

இந்த நூலில் தரப்பட்டுள்ள அனைத்து கோவில் மரங்களையும், அவருடைய மூலிகை தோட்டத்தில் பராமரித்து வருகின்றார். நாம் ஒவ்வொரு கோயில் மரத்தையும் காண தமிழகம் முழுவதும் உலா வர வேண்டியதில்லை. அவை அனைத்தையுமே அவருடைய மூலிகை தோட்டத்தில் வளர்த்து வருகின்றார். இவ்வாறு திரு. லேனா தமிழ்வாணன் பேசினார்.

**விழாவில் இயக்குநர், நடிகர் திரு. சேரன் அவர்கள் பேசியதாவது:-**

எனக்கு மிகவும் பிடித்த விஷயம் சினிமா தான். அதனால் என்னுடைய சிறு வயது பருவம் முதற்கொண்டு சினிமா பற்றிய விஷயங்களை மட்டுமே தெரிந்துக் கொள்ள ஆசைப்பட்டேன்.

புத்தகங்களின் மீது அவ்வளவாக பிடிப்பு ஏற்படவில்லை. புத்தகங்களும், எழுத்தாளர்களும் தான் இந்த உலகத்தினுடைய பெரிய பொக்கிஷங்கள்.

எழுத்தாளர்களை நான் மிகவும் மதிப்பேன். ஏனென்றால் அவர்கள் மூலம் தான் இந்த உலகத்தில் மிகப் பெரிய மாற்றங்களை உருவாக்க முடியும்.

பள்ளிக்கூடப் பாடத்திலே இலக்கியப் பாடங்களை வைத்து இருக்கிறார்கள். அதை மனப்பாடம் செய்து ஒப்பிக்க வேண்டும். ஆனால், நம்முடைய வாழ்க்கைக்கான தேடலை, வெற்றிக்கான ஆதாரங்களை காண்பதற்கு அவை உதவுவது இல்லை.

அறிவுத்திறன் படைத்த மாணவர்கள் பலர் நம்மிடத்திலே இருக்கிறார்கள். அவர் அவர்கள் ஏதாவது ஒரு துறையில் அதிக ஆர்வம் உள்ளவராக இருக்கலாம். அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு வகையான சக்தி இருக்கிறது. அவனிடத்திலே ஒரு சாதனைக்கான திறமை இருக்கிறது. அவனை மட்டம் தட்டாமல் ஊக்குவித்தால் தான் அந்த திறமை உலகத்துக்கு வெளிப்படும்.

பல இசைக் கலைஞர்கள், நடிகர்கள், எழுத்தாளர்கள், பாடகர்கள், இயக்குநர்கள், சினிமாத்துறை அல்லாத பல்வேறு துறைகளிலே இருப்பவர்கள் பலரிடத்திலும் இருந்த திறமைகள் தான் அவர்களை முன்னுக்கு கொண்டு வந்தது. தற்போது உள்ள பள்ளிப் பாடத்தை படித்து அவர்கள் முன்னுக்கு வரவில்லை.

யாரை எப்படி, எந்தத் துறையில் ஊக்குவித்தால் வெற்றி பெறுவான் என்பதை கண்டு பிடிக்கக் கூடிய ஆசிரியர்கள் இன்று நமக்கு தேவை. அதை பயன்படுத்தக்கூடிய கல்வி நமக்குத் தேவை. இதனை எழுத்தாளர்கள் தமது எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

இதனால், வருங்கால தலைமுறை ஒரு பெரிய மாற்று சக்தியாக அமையும். சமூக மாற்றத்துக்கான புத்தகங்களை எழுத்தாளர்கள் எழுத வேண்டும்.

எந்த ஒரு துறையிலும் ஆழமாக ஆராயும் போது தான் அதில் திகட்ட, திகட்ட புதையல் போல் மிகப்பெரும் மாற்றங்கள் வெளி வரும். வருங்கால சந்ததியினருக்கு இது மிகப்பெரிய பொக்கிஷமாக இருக்கும்.

தேடல் நம்மிடத்திலே இல்லாததால் நாம் பல பொக்கிஷங்களை தொலைத்து விட்டோம். உதாரணமாக, கீழாநெல்லி மஞ்சள் காமாலைக்கு நல்ல மருந்து. இதை கொஞ்சம் ஆட்டுப் பாலிலோ, தயிரிலோ கலந்து கொடுப்பார்கள். மஞ்சள் காமாலை குணம் ஆகும். இந்த எளிமையான மருத்துவ தகவல்களின் தேடல் நம்மிடத்திலே இல்லாததால் மறந்து விட்டோம்.

தமிழ்வாணன் எழுதிய "இயற்கை வைத்தியம்" என்ற நூலிலே இது போன்ற எண்ணற்ற தகவல்களைப் படித்தேன். தேடல் இருந்தால் தான் இதை அறிய முடியும்.